தேதி : 27.10.2025 SC.No. : 775/2023 PW :1 சாமி

(எதிரிகள் மற்றும் எதிரிகள் தரப்பு வழக்கறிஞர் ஆஜர்.)

<u>எதிரிகள் தரப்பில் குறுக்கு விசாரணை :</u>

1, 2 எதிரிகள் எனது மகனை அடித்ததாக நான் கொடுத்த புகார் வாக்குமூலத்திலும், போலீசார் விசாரணையிலும் சொல்லியுள்ளேன். என்னுடைய வீடு புதூரில் உள்ளது. சம்பவயிடத்திலிருந்து என்னுடைய வீடு அரை கி.மீ தூரத்தில் உள்ளது. சம்பவயிடத்தை சுற்றி நிறைய குடியிருப்பு வீடுகள் உள்ளது என்றால் சரிதான். அந்த குடியிருப்பு வீடுகளில் ஆட்கள் குடியிருந்து வருகிறார்கள் என்றால் சரிதான். அவர்களுக்கு சண்டை நடந்த விபரம் தெரியும் என்றால் சரிதான். சண்டை நடந்த விபரம் அருகிலுள்ளவர்களுக்கு தெரியும் என்பதனை போலீசார் விசாரணையில் சொல்லியுள்ளேனா? என்றால் சொல்லியுள்ளேன். சுரேஷ் என்னுடைய இடது பக்க கழுத்திலும், இடது பக்க முகத்திலும், இடது கையிலும் வெட்டினார் என்று புகார் வாக்குமூலத்திலும், போலீசார் விசாரணையிலும் சொல்லியுள்ளேன். எதிரி இராமைய்யா எனது தலையிலும், தோள்பட்டையிலும் அடித்ததாக எனது புகார் வாக்குமூலத்திலும், போலீசார் விசாரணையிலும் சொல்லியுள்ளேன் என்றால் சரிதான். 3வது எதிரி இராமைய்யாவிற்கு எனது உடன் பிறந்த தங்கை லட்சுமியை திருமணம் செய்து கொடுத்திருக்கிறோம் என்றால் சரிதான்.

இந்த வழக்கு சம்பவத்திற்கு முன்பு 3வது எதிரியை எனது மகன் மகேஷ், முருகேசன், எனது அப்பா காளி ஆகிய 3 பேரும் சேர்ந்து தாக்கியதாக ஒரு புகார் கொடுத்து, அந்த வழக்கு செங்கோட்டை நீதிமன்றத்தில் நிலுவையில் உள்ளது என்றால் சரிதான். நான் சொன்ன

நாள், சொன்ன நேரத்தில் சம்பவம் எதுவும் நடைபெறவில்லை என்றால் சரியல்ல. நானும், மாரிச்செல்வமும் குடிபோதையில் இருசக்கரவாகனத்தில் சென்று ஏற்பட்ட காயத்தை பயன்படுத்தி, எதிரிகள் என் மகன் மீது கொடுத்த புகாருக்கு பழிவாங்க வேண்டும் என்பதற்காக பொய்யாக புகார் கொடுத்து பொய் சாட்சியம் அளிக்கிறேன் என்றால் சரியல்ல. 1ம் எதிரி என்னை வெட்டவும் இல்லை என்றாலும், 2வது எதிரி, மாரிச்செல்வத்தை வெட்டவில்லை என்றால் சரியல்ல. எதிரி இராமைய்யா என்னை கம்பியால் தாக்கவில்லை என்றால் சரியல்ல. எதிரிகள் என்னை ஏசவோ, மிரட்டவோ இல்லை என்றால் சரியல்ல.

2வது சாட்சி மாரிச்செல்வம் எனது அண்ணன் மகன். 3வது சாட்சி முருகேசன் எனது உடன் பிறந்த தம்பி. லிங்கத்துரை எனது ஊர்க்காரர் ஆவார். சுப்பிரமணியன் எனது மருமகன் என்றால் சரியல்ல. அ.சா.7 ஐயப்பன் எனது மருமகன் என்றால் சரிதான். அ.சா.8 சௌந்தர்யா எனது மகள். எனக்கு ஏற்பட்ட காயத்திற்கும், எதிரிகளுக்கும் எந்த சம்பந்தமும் இல்லை என்றால் சரியல்ல.

<u>மறுவிசாரணை</u> –

இல்லை.

J CHRISTAL BABITHA

Digitally signed by J CHRISTAL BABITHA
Date: 2025.10.29 17:15:10 +0530

**தேதி :** 27.10.2025 **SC.No. :** 775/2023 PW :**2** மாரிச்செல்வம்

**(எதிரிகள் மற்றும் எதிரிகள் தரப்பு வழக்கறிஞர் ஆஜர்.)**

**<u>எதிரிகள் தரப்பில் குறுக்கு விசாரணை :</u>**

நான் முதல் விசாரணையில் சொல்லியுள்ளவாறு தான் போலீசார் விசாரணையிலும் சொல்லியுள்ளேன். எதிரி சுரேஷ்குமார் அ.சா.1 சாமியை கையிலும், கழுத்திலும் வெட்டியதாக நான் போலீசார் விசாரணையில் சொல்லியுள்ளேன். 2வது எதிரி தினேஷ்குமார் என்னை வெட்டியபோது, நான் சட்டை போட்டிருந்தேனா? என்றால் போட்டிருந்தேன். அந்த சட்டையில் இரத்தக்கறை படிந்ததா? என்றால் படிந்தது. இந்த விபரத்தை நான் போலீசார் விசாரணையில் சொல்லியுள்ளேனா? என்றால் மறந்து விட்டேன். நான் சொல்வது போல், சம்பவம் எதுவும் நடைபெறவில்லை என்றால் சரியல்ல. அதனால் தான், நான் போலீசார் விசாரணையில் இரத்தக்கறை படிந்த விபரத்தை சொல்லவில்லை என்றால் சரியல்ல. சம்பவயிடத்தை சுற்றிலும் நிறைய குடியிருப்புகள் வீடுகள் இருந்தது என்றால் சரிதான். அந்த வீடுகளில் ஆட்கள் குடியிருந்து வருகிறார்கள் என்றாலும், அவர்களுக்கு சம்பவத்தை குறித்து தெரியும் என்றாலும் சரிதான். இந்த விபரத்தை நான் போலீசார் விசாரணையில் சொல்லியுள்ளேன் என்றால் சரிதான்.

3வது எதிரி ரமேஷ், அ.சா.1ஐ தலையிலும், தோள்பட்டையிலும் அடித்ததாக போலீசார் விசாரணையில் சொல்லியுள்ளேன். எங்களை ஆட்டோவில் மருத்துவமனைக்கு அழைதது சென்றார்கள். அது யாருடைய ஆட்டோ என்று எனக்கு தெரியாது. 3வது எதிரி ரமேஷிற்கு சாமியின் உடன்பிறந்த தங்கையைத் தான் திருமணம் செய்து கொடுத்திருக்கிறோம் என்றால் சரிதான். அவர்கள் சேர்ந்து வாழாமல்

கொஞ்ச நாட்கள் பிரிந்து வாழ்ந்தார்கள் என்றால் சரிதான். தற்போது இருவரும் சேர்ந்து வாழ்கிறார்கள் என்றால் சரிதான். அவர்கள் எப்படி சேர்ந்து வாழலாம் என்று 1வது சாட்சியின் மகன் மகேஷ், அவரது சகோதரர் முருகேசன், அவரது அப்பா காளி ஆகியோர்கள் 3வது எதிரியை தாக்கியதாக ஒரு வழக்கு செங்கோட்டை நீதிமன்றத்தில் நிலுவையில் உள்ளது என்றால் அது எனக்கு தெரியாது.

என்னுடைய வீடு சம்பவயிடத்திலிருந்து 7 வீடுகள் தள்ளி உள்ளது. எனக்கு பைக் ஓட்ட  தெரியும். நான் சொன்ன நாள்,  சொன்ன நேரத்தில் நானும், சாமியும் குடிபோதையில் இருசக்கரவாகனத்தில் செல்லும் போது கீழே விழுந்து ஏற்பட்ட காயத்தை வைத்துக்கொண்டும், 3வது எதிரி எங்கள் குடும்பத்தின் மீது கொடுத்த புகாரை மிரட்டி வாபஸ் வாங்க செய்ய வேண்டும் என்ற காரணத்தினால், அ.சா.1ன் மூலம் ஒரு பொய்யான புகாரை கொடுத்து, அதற்கு ஆதரவாக பொய் சாட்சியம் சொல்கிறேன் என்றால் சரியல்ல. 1வது எதிரியும், 3வது எதிரியும் அ.சா.1ஐ தாக்கவில்லை என்றால் சரியல்ல. 2வது எதிரி என்னை தாக்கவில்லை என்றால் சரியல்ல. எங்களுக்கு ஏற்பட்ட காயத்திற்கும், எதிரிகளுக்கும் சம்பந்தமில்லை என்றால் சரியல்ல.

<u>மறுவிசாரணை</u> –

இல்லை.

J
CHRISTAL
BABITHA

Digitally signed
by J CHRISTAL
BABITHA
Date: 2025.10.29
17:15:18 +0530

**தேதி :** 27.10.2025 **SC.No. :** 775/2023 PW :3 முருகேசன்

**(எதிரிகள் மற்றும் எதிரிகள் தரப்பு வழக்கறிஞர் ஆஜர்.)**

**எதிரிகள் தரப்பில் குறுக்கு விசாரணை :**

நான் முதல் விசாரணையில் சொல்லியுள்ளவாறு தான் போலீசார் விசாரணையிலும் சொல்லியுள்ளேன். 3வது எதிரி என்னுடைய அக்காவை திருமணம் செய்துள்ளார் என்றால் சரிதான். அ.சா.1 சாமி என்னுடைய உடன் பிறந்த அண்ணன். நான் சம்பவயிடத்திற்கு 10 நிமிடத்திற்கு மேல் சென்றேன். நான் அவ்வாறு தான் போலீசார் விசாரணையிலும் சொல்லியுள்ளேன்.

**மறுவிசாரணை –**

இல்லை.

J
CHRISTAL
BABITHA

Digitally signed by J CHRISTAL BABITHA
Date: 2025.10.29 17:15:25 +0530